**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 141/2020 |
| Prosecution Witness | : | **அ.சா.**5 |
| Name | : | **மகாலெட்சுமி** |
| Father's / Husband Name | : | **கனகராஜ்** |
| Address | : | **நக்கசேலம்** |
| Age | : | 50/2025 |

**தேதி : 21.01.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **1 மற்றும் 3 முதல் 7 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலத்தூர் வட்டம், நக்கசேலம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கின் பொன்னர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி கனகராஜ் எனது கணவர். எனக்கு துறையூர் ஆக்ஸிஸ் வங்கியில் கணக்கு இருந்தது. அந்த கணக்கில் வரவு, செலவுகளை எனது கணவர்தான் செய்வார். பணம் எடுப்பதாக இருந்தாலும், போடுவதாக இருந்தாலும் ஏ.டி.எம் கார்ட்டை பயன்படுத்தி என் கணவர்தான் எடுப்பார். தற்போது அந்த வங்கி கணக்கை பயன்படுத்துவதில்லை. அதனால் எனக்கு வங்கி கணக்கு எண் தற்போது ஞாபகமில்லை. அது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் துறையூர் ஆக்ஸிஸ் வங்கிக்கு சென்று நான்தான் வங்கி கணக்கை தொடங்கினேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தனியார்

மருத்துவ கல்லூரியில் அட்டண்ட்ராக வேலை செய்து வருகிறேன். எனது வங்கி கணக்கினை என் கணவர்தான் இயக்கிகொண்டிருக்கிறார். அது எனது பெயரில் உள்ள தனி வங்கி கணக்குத்தான். ஏ.டி.எம் கார்டில் பணபரிவர்த்தனை செய்வது என்னை தவிர வேறு யாரையும் அனுமதிக்ககூடாது என்ற விதிமுறை உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

அதுபோல இந்த வங்கி கணக்கில் எதற்காக யார் எவ்வளவு பணம் செலுத்தினார்கள், எவ்வளவு பணம் எடுக்கப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.